தொகுதி- ருஅ :: பகுதி- கூ — Vol. 58 :: No. 9

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1993
சுபகிருது—மார்கழி
DECEMBER—1962

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 22—3—63)

உ

உள்ளுறை

1. துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்
ஆ. சிவலிங்கனார் 259

2. வள்ளுவர் காலமும் வையாபுரியாரும்
வி. பா. கா. சுந்தரர் 268

3. குறள் நோக்கில் நாலடியின் அமைப்பும் பகுப்பும்
வை. கா. சிவப்பிரகாசம் 273

4. சொல்லதிகாரம் எளிமையாக்கும்
நா. இராமையா பிள்ளை 280

5. செய்திக் குறிப்புகள்.

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L. C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர், திரு, மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph D சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வீ. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.
9. வித்துவான். மு உலகநாதன் தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ரு௮ | திருவள்ளுவர் ஆண்டு 1993 சுபகிருது — மார்கழி | பகுதி. ௯
Vol. 58 | 1962—December | No. 9

(241-ஆம் பக்கத்தொடர்ச்சி)

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

ஆ. சிவலிங்கனர், மயிலம்.

"உரக வேந்தன் ஒருதலை தரிப்பக்
காதல் கூர்ந்து கண்ணகல் ஞாலம்
உச்சிக் கொண்ட **கச்சிப்** பதியும்
எறும்பியுயிர் நீங்கில் எறும்பி யீருரி
போர்த்துப் போகும் **புராதன மலையும்**
ஆன்பாற் கன்றி யளவில்பல் கறிக்கும்
இன்சுவை விளையும் மேன்**சே யூரும்**
கயிலைபோற் சிறந்த **மயிலமால்** வரையும்
இடங்கொண் டிருந்த எங்கள் நாயக!"

(சிவ.கலம். 67)

"பாரினன் முகமா மிக்கரை முனிந்த
பரன்திரு **வக்கரை** நகரும்
பயில்இட மெனக்கோள்......ஞானமாதவனே"

(சிவ. கலம். 50)

என வரும் கலம்பகப் பாடல்களைக் காண்க.

நம் அடிகளின் தந்தையாரை வீர சைவராக்கிய மடம் திருவண்ணுமலைக் குருதேவர் மடமாம். இது திருவண்ணு மலைத் தெற்கு வீதியில் இருந்தது. இஃதன்றிக் குகைநமச் சிவாயர் மடமும், சித்தர் சிவப்பிரகாசர் மடமும் ஆங்கிருந் தன. பல வீர சைவமடங்கள் இருந்தன எனவே அவைக ளால் வீர சைவர்களான மக்கள் பலர் என்றறியலாம்.

துறைமங்கலத்தில் சென்ன வசவையர் மடம் என்ப தொன்று அண்ணுமலை ரெட்டியாரின் முன்னேர்களால் நிறுவப்பட்டிருந்தது. அங்கு நம் அடிகள் தென்தேச யாத் திரை காலத்தில் தங்கியருளினர்.

திருச்சித் துறையூரில் சித்தர் சிவப்பிரகாசர் மடம் ஒன்றிருந்து வீரசைவத்தைப் பரப்பியது.

"சிதம்பரத்தில் ஸ்ரீ பச்சைக்கந்ததேவசுவாமிகள் பரம் பரையாக எழுந்தருளியிருந்து சமய பாலனம் செய்து வந் துள்ளார்களெனத் தெரியவருகின்றது. இந்த சுவாமிகளு டைய மரபினர்கள்தாம். பஞ்சாச்சாரியர்களிடம் சூத்திரம் பெற்று மிகப் பழமையான காலத்திலேயே தமிழ்நாட்டிற்கு வந்து சமய பரிபாலனம் செய்தவர்கள் எனத் தெரியவரு கின்றது.

(வீர.மலர் 2. இதழ் 1. பக். 6.)

நம் அடிகளை யாட்கொண்ட பொம்மபுரம் இரண்டாம் பட்டத்து அடிகள் இப்பச்சைக் கந்த மரபினராவர். குரு நமச்சிவாயர் மடமும் சிதம்பரத்தில் உண்டு.

கும்பகோணத்திலிருந்து வீரசைவசமயத்தைப் பரப் பியவர் சாரங்கதேவராவர். இம்மடத்தில்தான் ஒட்டக் கூத்தர் தங்கியிருந்தார். இம்மடத்தால் திருநாகேசுரம் போன்ற சுற்றுப்பக்கத்தூர்களில் இச்சமயம் பரவியது.

திருநெல்வேலியைச் சார்ந்த திருச்செந்தூரிலும் வீர சைவர்களிருந்தனர். உயர்திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் "அரும்பொருள் விளக்க நிகண்டு" என்னும் நூலின் பதிப்பு முன்னுரையில் கீழ் வருமாறு எழுதினர்:—

"இந்நிகண்டினை யியற்றிய அருமந்தையதேசிகர் வீர சைவமரபினர். சிவப்பிரகாசர் என்பவரின் புதல்வர். திருச்செந்தூரில் வாழ்ந்தவர். தமது ஞானாசிரியரும் தில்லைவாசியுமாகிய பச்சைகந்த தேசிகருடைய ஆணையைத் தலைமேற்கொண்டு சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு என்பனவற்றிலுள்ள ஒரு சொற் பல்பொருட் பெயர்களைத் தொகுத்து எதுகை முறையில் அமைத்து 700 விருத்தங்களால் இந் நூலினை யியற்றினர். இஃது அரங்கேற்றப் பெற்றகாலம் சாலிவாகன சகாப்தம் 1685 சித்திரபானு மாசிமாதம் சிவநிசிபொருந்திய வெள்ளிக்கிழமையாகும். எனவே கி. பி. 1763ல் இந்நூல் முடிந்தது." (செந்தமிழ். தொகுதி 29. பகுதி. 4. பக்.25,26).

இக்கூற்றால் 18-ம். நூற்றாண்டில் திருச்செந்தூரில் வீர சைவம் பரவியிருந்தது என்பதுபெறப்படும். அருமருந்தைய தேசிகருக்கு ஞானபீடம் சிதம்பரம் பச்சைக்கந்த தேசிகர் ஆதீனம் என்றதால் 17-ம் நூற்றாண்டில் விளங்கிய பச்சைக் கந்தர் தெற்கேசென்று தமது சமயத்தைப் பரப்பினர் என்று கொள்ளலாம்.

திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் பிறிதோர் இடத்தில் எழுதியது வருமாறு:—

"இவ்வாசிரியர் (அருமந்தைய தேசிகர்) வாழ்ந்த இடம் திருச்செந்தூர் என்பது முன்னமே குறிக்கப்பட்

டது' இந்நகரம் வீரசைவர் மிக்கு விளங்கிய இடமாகும். சிவப்பிரகாசசுவாமிகள் இந்நகரத்திற்குச் சென்று நீரோட்டகயமகவந்தாதி பாடிய வரலாறும் அதுவீரசைவத் தொடர்புடையது என்பதை விளக்கும்'' [செந்தமிழ் தொகுதி29. பகுதி4. பக்கம்27]

அடிகளின் மைத்துனராகிய தவத்திரு. சாந்தலிங்க சுவாமிகள் கோயம்புத்தூரைச் சார்ந்த பேரூரில் மடம் அமைத்துக் கொண்டு சமயத்தைப் பரப்பினர். இங்ஙனமாகத் தமிழகமெங்கும் ஆங்காங்கு இச்சமயம் பரவியிருந்தது என்னலாம்.

மகமதியம்

முதல் முதல் தென்னிந்தியாவில் நாடு பிடிக்கும் வேட்கையுடன் போந்தவன் மாலிக்கபூர் என்பவனே. இவன் தில்லியரசன் அல்லாவுதீன் கில்ஜியின் படைத்தலைவன். இவன் கி. பி. 1310ன் இறுதியில் வந்தவன். அக்காலத்தில் மதுரையையாண்ட பாண்டியன் வீரபாண்டியன் என்பவன். மாலிக்காபூர் மதுரையைக் கொள்ளையிட்டுச் சென்றான். வீரபாண்டியன் தனது ஆட்சியின் பிற்பகுதியில் தலைநகராகிய மதுரையைத் தலைவனான ஜலாலுதீன் அசன்ஷா என்பவனிடம் இழந்துவிட்டு வேறிடம் சென்றான். இத்தலைவன் தில்லியிலிருந்த மகமதுதுக்ளக்என்னும் அரசனால் தென்னாட்டிற்கு அனுப்பப்பட்டனன். இவன் பாண்டிய அரசனை வென்று அவனது நாட்டையும் கவர்ந்து கொண்டதோடு தில்லி மன்னன் பிரதிநிதியாக மதுரையிலிருந்து அரசாளவும் தொடங்கினான். சில நாட்களுக்குப் பின்னர் இவன் தில்லி வேந்தனுடைய தொடர்பை முழுதும் ஒழித்துவிட்டு மதுரையில் அரசு செலுத்தி வந்தான். பாண்டிநாட்டில் மகமதியராளுகை கி. பி. 1377 வரை நடை

பெற்றது. ஜலாலுடீனுக்குப் பிறகு அங்கு அரசாண்ட மகமதியர் தலைவர்கள் அல்லாவுடீன்உடையூஜி, குட்டப் உடீன், கியாத்துடீன், நாசுரூடீன், அடில்ஷா, பஃருடீன், முபாரக்ஷா. அல்லாவுடீன், சிக்கந்தர்ஷா என்போர்........ இவர்கள் ஆளுகையைக் குறிக்கும் இரண்டு கல்வெட்டுக்கள் புதுக்கோட்டை இராச்சியத்துள்ள இராங்கியம், பனையூர் என்ற ஊர்களில் உள்ளன'' (பாண்டியர் வரலாறு பக். 58) மேற்குறித்த மகமதியர்களால் மக்கள் மிகவும் துன்புற்றிருக்கின்றனர். இவர்களால் மகமதியர்களான சைவவைணவர் எத்துணையர் என்று அளவிடமுடியாது. இவர்கள் மதுரை திருநெல்வேலிப் பகுதிகளில் மிகுதியும் பரவினர். விஜயநகர அரசர்களால் ஒடுக்கப்பட்ட பின்னர் ஆங்காங்கு அவர்கட்குக் கீழ் அடங்கிய சிற்றரசர்களாகவும் பிரபுக்களாகவும் ஆயினர். பெரும் பணக்காரர்களும் செல்வாக்குள்ளவர்களும் இருந்திருக்கின்றனர்.

"வாஸ்கோடிகாமா போர்ச்சுகல் தேசத்து அரசருக்கு எழுதிய நிருபம் ஒன்றில் காயல் என்ற ஓர் வியாபாரஸ்தலம் துருக்கர்களின் அரசுக்கு உட்பட்டதென்று குறிப்பிட்டுள்ளார். இதன் உண்மை சந்தேகத்துக்கிடனுவதென்ருலும் ஒருக்கால் காயற்பட்டண முதலிய இடங்களில் இராஜாக்களைப் போன்ற பெரும் அந்தஸ்திலிருந்த அக்காலத்து மரக்காயர்களையே இவர் அதிபதியென்று ஐயுற்றுப் பின்னர்த் தெளிந்தும் இருக்கலாம். சீதக்காதி முதலியவர்கள் அப்பிரதேசங்களில் உண்மையில் இராஜாக்களை ஒத்த செல்வவான்களாகவும் அந்தஸ்துடையவர்களாகவும் இருந்திருக்கின்றர் என்பது ஒப்புக் கொள்ளக் கூடியது எனினும் வாஸ்கோடிகாமா இந்தியாவிற்கு வந்தும் வாராமலும் இருக்கும் சமயத்தில் அவர் கொண்ட அபிப்பிராயம் எத்தன்மைத்

தாகும் என்பதை இதனை வாசிக்கும் நீங்களே அறிந்து கொள்ளுங்கள்" (திருநெல்வேலிச்சீமைச்சரித்திரம் பக். 30)

இவ்வாறு குருகுகதாசபிள்ளையவர்கள் தமது திருநெல்வேலி சீமைச் சரித்திரம் என்ற நூலில் கூறியுள்ளார். இக்கூற்றிலிருந்து தென்னாட்டில் கீழக்கரைப் பக்கங்களில் அக்காலத்தில் மகமதியர்கள் நல்லமுறையில் இருந்திருக்கின்றார்கள் என்பது பெறப்படுகின்றது. அப்பிள்ளையவர்கள் மற்றும் ஓரிடத்தில்,

"கீழ்க்கரையை யடுத்த காயல்பட்டிணம், குலசேகரன் பட்டிணம், புன்னைக்காயல் முதலிய இடங்களில் இராஜாதிராஜனை ஒத்த செல்வம் வாய்க்கப்பெற்றிருந்த மரக்காயர் பலர் நாம் பிரஸ்தாபிக்கும் அக்காலத்திற்குச் சிறிது முற்பட்ட காலங்களாக இருந்திருக்கின்றனர். (தி. சீ. சா. பக், 31)

என்பர். எனவே விஜயநகர அரசர்களால் வெல்லப்பட்ட மகமதியர்கள் ஆங்காங்கு சிற்சில விடங்களில் சமீந்தார்களாக இருந்து ஆட்சி செய்திருக்கின்றனர் என உணரலாம். இங்ஙனம் திருமலைநாயகர் ஆட்சியிலும் சில மரக்காயர் இருந்திருக்கின்றனர்.

அவர்களுள் சீதக்காதி என்று பெயர் புனைந்துகொண்ட செய்தக்—காதிர் என்பாரும் ஒருவர். இவர் இராமநாதபுரம் ரகுநாதசேதுபதி காலம் முதல் (கி. பி. 1645—74) கிழவன் சேதுபதியின் பிற்காலம் வரை (1674—1710) வாழ்ந்தவர். இவரே நமது அடிகள் காலத்தில் விளங்கிய மகமதியராவர் இவரது முற்காலத்தில்தான் உமறுப்புலவர் சேதுபதியின் ஆட்சிக்குட்பட்ட எட்டயபுர சமஸ்தானத்தில் புலவராக விளங்கியவர். உமறுப்புலவர் கீழக்கரையில் தோன்றியவர். இவரது காலம்பற்றி மாறுபடக் கூறுவர் தேசிகர் அவர்கள்,

"சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவர் பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்தவராகல்வேண்டும்" என ஓரிடத்திலும் (17-நூ. ஆ. த. பு. பக் 31)

"இவர் சீதக்காதியின் அந்திம காலத்தவராகவே பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவராவார்" என்று பிறிதோர் இடத்திலும் (பக். 205) எழுதியிருக்கின்றார்கள். இவை முரண்பாடுடையனவாக இருப்பினும் நாம் உமறுப் புலவரை பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து இறுதிக்காலம் அளவும் இருந்தவர் எனக் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளின் இவர் ஒரு வேளை நம் அடிகளின் பிற்காலத்தவராதலும் கூடும்.

இவ்வுமறுப்புலவரே யன்றிச் சவ்வாதுப்புலவர் என்பவரும் மகமதியப்புலவராக இருந்திருக்கின்றார். இவரைப் பற்றித் திரு, கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் தமது இலக்கியவரலாறு என்ற நூலில் பின்வருமாறு எழுதுவர்:—

"சவ்வாதுப் புலவர்என்னும் மகமதியர் முகைதீன் ஆண்டவன் பிள்ளைத்தமிழ் என்று ஒரு சிறு காப்பியம் செய்தார். இவர் மைத்துனர் ஒரு புலவர். அரேபியாவில் மெடினா நகரைச் சிறப்பித்து ஒரு அந்தாதி பாடியுள்ளார். இவர் காலத்திலே சர்க்கரைப் புலவர் என்னும் சைவப்புலவர் (கி. பி, 1645-70) இராமநாதபுரம் கடாரவூரினர் திருச்செந்தூர்க் கோவைபாடினார்." (இலக்கிய வரலாறு 464).

இக்கூற்றில் சர்க்கரைப் புலவர்காலம் கி. பி. 1645-70 என்பதால் இவர்காலத்தவரான சவ்வாதுப் புலவரும் நம் அடிகளின் பிற்காலப் புலவராவர்.

சிவஞானபாலயசுவாமிகள் II காஞ்சியை யாண்ட ஒரு நவாபின் மனைவிக்குண்டான சூலை நோயை நீக்கியதாகவும்

அந் நவாபுவானவன் காஞ்சி ஏகாம்பரநாதருக்குக் குறைத்து விட்ட சிறப்பொடு பூசனைகளைச் சரிவர நடாத்தும்படிக் கூறியதாகவும் வரலாறுண்டு. எனவே காஞ்சியிலும் மகமதியர்கள் இருந்தனர் என்பதும் பெறப்படும்.

கிறித்தவம்

எமானுவல் (Emanuval) என்னும் போர்ச்சுகல் அரசனால் அனுப்பப்பட்ட வாஸ்கோடகாமா என்ற மாலுமியே முதல் முதலில் இந்தியாவைக் கண்டுபிடித்தவனுவான் இவன் போர்ச்சுகல் தேசத்துறைமுகப் பட்டணமாகிய லிஸ்பன் என்ற பட்டணத்தைவிட்டு 1497-ம் ஆண்டு சூலை 9-ந் தேதி புறப்பட்டான். ஆப்பிரிக்கத் தென் முனையாகிய நன்னம்பிக்கைமுனையைச் சுற்றி மிலாண்டா (Milanda) என்ற துறைமுக வழியாக அங்கிருந்த ஒரு முகமதிய மாலுமியின் துணைகொண்டு 22—5—1498-ல் மலையாளக் கள்ளிக்கோட்டையை யடைந்தான். அவன் சாமுத்திரி (Zamorin) என்ற அரசனைக் கண்டு பேசித் தன்னுடு திரும்பினுன். இந்தியாவைக்கண்டு பிடித்த மகிழ்ச்சியால் போர்ச்சுகல்அரசன்மீண்டும் பீட்ரோ ஆல்வாஸ் காப்ரல் (Pedro Alvaz Cabral) என்பானை வியாபாரம் செய்வதற்காக அனுப்பினுன். அவனும் வழிதவற அமெரிக்காவில் உள்ள பிரேசில் (Brazil) என்ற விடத்தை யடைந்து மீண்டு இந்தியாவை யடைந்தனன், அவனுக்குப் பின்னர் அநேகம் போர்ச்சுகீசியர்கள் இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் யாவரும் (15-ம் நூற்றுண்டில் வந்தவர்கள்) கொச்சி, கள்ளிக்கோட்டை, கோவா முதலிய கடற்கரைப் பட்டினங்களில் தங்கி வாணிகம் செய்வாராயினர். அக்காலத்தில் வியாபாரத்தில் சிறந்த முகமதியர்கள் இவர்களுடன் போரிட்டுத் தோற்றனர். போர்ச்சுகீசியரை நம் தமிழகத்தார் பறங்கியர் என்றனர். இப்பறங்கியர்கள் வியாபா

ரத்தை மட்டும் பெரியதாக எண்ணினர். அதனால் தமது நாட்டிலிருந்து பல மதபோதகர்களைக் கொண்டுவந்து ஆங்காங்கு தமிழர்களைக் கிறித்தவர்களாக்கினர். பிரான்சிஸ் சேவியர் (Francis Xavier) காலமான கி.பி. 1542-ல் காயல் பட்டினம், மணப்பாடு, புன்னைக்காயல், தூத்துக்குடி, வேம்பாறு முதலிய இடங்கள் யாவும் அநேகமாகக் கிறித்தவ மதத் தலங்களாகவே மாறிவிட்டன." (திரு. சீ. ச. பக். 33)

நம் அடிகள் காலத்தில் கிறித்தவம் தென்னாட்டில் பல விடங்களில் பரவியது. கொச்சியில் தலைமைக்குரு அமர்ந்திருந்தார். மற்றைய விடங்களில் பற்பல குருமார்கள் இருந்து தமது மதத்தைப் பரப்பி வந்தனர். அவர்களுள் தத்துவபோதர் என்பவரும் ஒருவர். இவர் பிராமணர்களைப் பெரிதும் வஞ்சித்தவர். பூணூல் முதலியவற்றை மேற்கொண்டமையால் கிறித்தவப் பாதிரிமார்களாலேயே வெறுக்கப்பட்டார். திருச்சிராப்பள்ளி, சேலம் முதலிய விடங்களுக்குச் சென்று கிராமங்கள்தோறும் தம்சமயநெறியினை விளக்கினார். அக்காலத்தில்தான் நம் அடிகளைக்கண்டு வாதிட்டார். 42 ஆண்டுகள் சொற்பொழிவு மூலம் தம் சமயத்தைப் பற்றி விளக்கி இறுதியில் சென்னை மயிலாப்பூர்ச் சாந்தோம் மடத்தின் பக்கத்து வதிந்து கி. பி. 16-2-1656ல் உயிர் நீத்தார்.

மேற்கூறிய போர்ச்சுகீசியரால் தூத்துக்குடி முதலிய விடங்களில் கிறித்தவம் பரவியிருந்தது. 2-3-1602ல் கிழக்கிந்திய வர்த்த சங்கம் ஒன்று நிறுவி அதன்மூலம் இந்தியாவுக்குவந்து வியாபாரம்செய்த டச்சுக்காரராலும்(Holland) 1620-ல் ஒரு வர்த்தகக் கம்பெனி ஏற்படுத்திக்கொண்டுவந்த டேனிஷ் (Danish) வணிகராலும் 1600ல் ஒரு சங்கத்தை நிறுவிக்கொண்டு வந்த ஆங்கிலேயராலும் பழவேற்காடு, தரங்கன்பாடி, கிராமபூர், மதுரை, சென்னை போன்ற இடங்களிலும் இம் மதம் பரவலாயிற்று.

248-ம் பக்கத் தொடர்ச்சி

வள்ளுவர் காலமும், வையாபுரியாரும்.

வித்துவான்.
வீ. ப. கா, சுந்தரர் எம். ஏ.
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

அந்தம் இறுதி இலக்கண வழு:-

இவ்வாறு சொல் தொடுத்தல் முறை எனத் தொல்காப்பியர், நன்னூலார் விதிகள் வகுத்துள்ளனரா எனவினவலாம்? தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலில் ஒரு இரு எனும் சொற்களின் முன், உயிர் எழுத்து வருமொழி முதலில் வந்தால், இறுதி 'உ' கெடும்; முதல் எழுத்து நீளும் என விதி வகுத்துள்ளார்.

முதலீ ரெண்ணின் முன் உயிர்வரு காலைத்,
தவலென மொழிப உகரக் கிளவி;
முதனிலை நீடல் ஆவயி னான......(50)

நாளும் நற்றமிழ் விரும்பும் நண்பர்களே, பேணித் தமிழ் வளர்க்கும் பேரன்பர்களே, நாடுதல் கோடுதல் இன்றி, நடுநிலை நின்று, ஆர அமர ஆய்ந்து முடிவுரைக்க வேண்டும். தொல்காப்பியர் வகுத்த புணரியல் விதிக்கு முரணாகப், பிழைபட வள்ளுவர், ஒரு அந்தம் என்ற சொற்றொடை அமைத்தார் என்று, வள்ளுவர் மீது இலக்கண வழுவை ஏற்றல் பொருந்துமா? எனவே அந்தம் எனக்கடை நிலை கொண்டது தவறாகும். ஒரு-வந்தம் எனப் பிரிப்பதும், அவற்றிற்குப் பெருஞ் செல்வம் எனப் பொருள் கொள்ளுவதுமே பொருத்தமும் திருத்தமு மாகும்.

அதிகாரக் கருத்துடன் இணைந்த பொருள்:-

இனி, மற்றொரு வகையாலும் பெருஞ் செல்வம் என்ற பொருளே பெரிதும் பொருந்துவதை அறிந்தின்புறலாகும். வெருவந்த அதிகாரத்தின் பல குறட்பாக்கள் பெருஞ் செல்வத்தின் இழப்பைப் பற்றியே பெரிதும் பேசுகின்றன. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் இழப்பன, பல்வகைச் செல்வங்கள் என்பதைப் பல்வேறு வகையிலும் மீண்டும் மீண்டும் பல்வேறு கோணங்களினின்றும் எடுத்துக் காட்டி வலியுறுத்தும் வள்ளுவர்·563 ஆம் குறளிலும் செல்வத்தின் இழப்பினையே குறித்துள்ளார் என்றால், அது பொருத்த முடையதே. இஃதை யறியக் கீழ்க் கண்ட குறட் கருத்துக்களை ஒப்பு நோக்குவோம்.

562. கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

565. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்
வம் பேஎய்கண் டன்ன துடைத்து.

568. இனத்தாற்றி எண்ணாத வேந்தன்சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு.

செல்வத்திற் குரிய வேறு பெயர்களுடன் ஒப்புமையான பொருள்:-

இனிப் பெருஞ் செல்வப் பொருளே ஒரு வந்தத்திற்குப் பெரிதும் பொருந்துவது என்பதை வேர்ச் சொல் வழியாயும் அறியலாகும். ஒன்றாக வந்தடைவது ஒரு வந்தம். இது போன்று ஒரு சேரத் திரள்வது செல்வம் என்னும் பொருண்மை படுமாறே, செல்வத்திற்குரிய வேறு பெயர்களின் பொருண்மையும் அமைந்துள்ளது இங்கு ஒப்பு நோக்கி அறிதற் குரியது.

1. திரு-திரண்டது.
(சேரே திரட்சி என்ற தொல்காப்பிய வரியால், திரள்வது என்பது ஒன்று சேர்தலாகும்.)
2. செல்வம்-ஒருவனிடம் சேர்ந்து திரளச் செல்வது.
3. ஆக்கம்-மேலும் மேலும் பெருகிச் சேர்ந்து ஆகுவது.
4. மா-சேர்ந்து பெருகிப் பெரியதாகுவது; பெருமை ஆக்குவது.
5. பணம்-படர்குவது. (படம் பணம்)
6. வெறுக்கை-சேர்ந்து சேர்ந்து மிகுதியாகுவது (உள்ள வெறுக்கை (600 குறள்=ஊக்க மிகுதி)

பிறிதொரு குறள் வழியாகப் பொருள்:-

இனி, பிறிதோர் குறட் கருத்தாலும் ஒருவந்தத்தின் பொருளைத் தெளிவாய் அறியலாம். ஒருவந்தம் இடம்பெற்ற பிறிதொரு குறள் வருமாறு:-

ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார் (593)

இங்கும் பரிமேலழகர் கொண்ட பொருள் பிழைபட்டதே, இக்குறளில் 'ஊக்கம் ஒருவந்தம் கைத்துடையார்' என்ற பகுதிக்குப் பரிமேலகழகர் உரை கூறுங்கால், ஒருவந்தம் ஊக்கம் கைத்துடையார்' எனச் சொற்களை வலிந்து மாற்றித், தாம் கொண்ட பொருளுக் கேற்பப் பெய்து கொண்டார். இது பொருந்தாதது: பொருட் சிறப்பும் இல்லாதது. ஆனால் இக்குறட் பகுதிக்குக் காளிங்கர் கண்ட பொருள் செவ்வியதும் ஒவ்வியதும் ஆகும். "ஊக்க முடைமையாகிய பெருஞ்செல்வத்தைத் தம்மிடத்துடையார்" என்றுரைத்துள்ளார். கைப் பொருளை இழந்து விட்டாலும்

ஊக்கமாகிய பொருளைக் கையகத்துடையார் துன்புற்றலை யார் என்னும் கருத்தே பெரிதும் பொருத்த முடையது. ஒருவகைப் பொருளை இழந்தால். பிறிதொரு வகைப் பொருள் கையகத்தது என்ற கருத்திலே, பொருள் இயைபு மிக்குள்ளது.

ஊக்கமுடைமை அதிகார கருத்துடன் இசைத்த பொருள்.-

ஒருவந்தப் பெருஞ் செல்வப் பொருண்மையை இங்கும் வேறோர் முறையில் அறியலாகும், மேற்காட்டியகுறள் (593) ஊக்கமுடைமை என்னும் அதிகாரத்துள்ளது. இவ்வதி காரத்துப் பல குறட்பாக்களும் ஊக்கமுடைமையைச் செல் வமுடைமை என உயர்த்திப் போற்றுவதை ஒப்பு நோக் கின், ஒருவந்தத்திற்குப் பெருஞ்செல்வப் பொருண்மை பெரி தும் பொருந்துவது எனத் தெளியலாகும்.

—உடைமை எனப்படுவது ஊக்கம் (591)
—உள்ள முடைமை உடைமை (592)
—உரமொருவற் குள்ள வெறுக்கை (600)

பொருளை ஆக்கும் ஊக்கமாதலால் அது பெரும் பொருள் என உருவகிக்கப் பெற்றது 593 ஆம் குறளில் இவ்வாறு வள்ளுவரே ஊக்கத்தைச் செல்வமென விளக்கிப் போவ தால் ஒருவந்தத்திற்குச் செல்வமெனக் காளிங்கர் கண்ண ழித்தது வள்ளுவர் உள்ளத்திற்குகந்தது எனலாம். இங்குப் பரிமேலழகர் ஒருவந்தத்திற்குரைத்த ‘நிலைபெற்ற’ என்ற பொருண்மையானது ஒரு-அந்தம் எனப்பிரித்துக்கொண்ட சொன்மையோடு இயையாமை இனிது அறியலாகும்.

இனி, இறுதியாக, ஒரு சிறு குறிப்பைச் சொல்லவிழை கின்றேன். காளிங்கர் ‘ஒருவந்த’ என்ற பிறிதொரு பாடம் கொண்டிருப்பாரோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

முடி நிலையாக இக்கட்டுரையின் தெரிநிலை வருமாறு:—

1 ஒருவந்தத்திற்கு எவ்வாறு பொருள் நோக்கினும்— அஃதாவது இணைந்த சொற்களின் வழிப் பொருள் நோக்கினும், கருத்துச் சிறப்புக் கருதி நோக்கினும். அதிகாரக் கருத்துடன் அமைவுற இணைத்து நோக்கினும், பெருஞ் செல்வம் என்னும் பொருளே தெளிவு மிக்கது; சிறப்பாய்க் கொள்ளத் தக்கது.

2. இப்பொருள் காளிங்கர் சொல்லியது; வேர்ச்சொல் வழிப் புல்லியது.

3, ‘ஒரு’ எனவும் ‘அந்தம்’ எனவும் பிரித்திணைத்தது நல்லிலக்கண நெறியொடும் தொல்லிலக்கிய மரபொடும் பொருந்தாப் பிழையாகும். ஆகவே, ஒருவந்தம், தமிழ் வட மொழிக் கலவைச் சொல் என்றதுவும் பிழைபட்டதாகும்.

4. ஆகவே, ‘சங்க காலத்துக் காணப்படாத இக் கலவைச் சொல்லாட்சியை வள்ளுவர் அமைத்தார். ஆதலால் அவர் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர்’ என வையாபுரியார் சாற்றிய முடிவும் ஏற்றிட வொண்ணுதாம்.

இனி. அடுத்த கட்டுரைகளில், ஆதி பகவன், மாத்திரை, பாக்கியத்தால் முதலிய வள்ளுவர் பயன்படுத்திய செந்தமிழ்ச் சொற்செல்வம் பற்றி ஆய்ந்தறிவோம்.

235-ஆம் பக்கத் தொடர்ச்சி

குறள் நோக்கில் நாலடியின் அமைப்பும் பகுப்பும்

வை, கா. சிவப்பிரகாசம்,
தமிழ்த்துறை, காட்லிக்கல்லூரி. பருத்தித்துறை.
இலங்கை

(5) பொதுவியல்:

32. அவையறிதல் (குறள்: அமைச்சியல்: அதி: 72)

(6) பகையியல்:

33. புல்லறிவாண்மை (குறள்: நட்பியல்: அதி: 85)

34. பேதைமை (குறள்: நட்பியல்: அதி: 84)

35. கீழ்மை } (குறள்: குடியியல்: அதி: 108)
36. கயமை }

(7) பல்நெறியல்:

37. பல்நெறி — ?

(இ) காமத்துப்பால்:

(1) இன்பதுன்பவியல்:

38. பொது மகளிர் (குறள்: பொருட்பால்: நட்பியல்: அதி: 92)

(2) இன்பவியல்:

39. கற்புடைய மகளிர் — ?

40. காமம் நுதலியல் — ?

குறளின் அதிகாரங்களும் நாலடியின் அதிகாரங்களும்

நாலடியின் நாற்பது அதிகாரங்களையும் குறளதிகாரங்களோடு ஒப்புநோக்கின் இரு நூற்களின் அமைப்பிலும் பகுப்பிலும் உள்ள வேறுபாடுகள் பற்றிய உண்மைகள் புலனாகும். அவ்வாறு நோக்குமிடத்து நாலடியின் அதிகாரங்கள் குறளதிகாரங்களோடு பெயரொற்றுமையுடையன வாயிருத்தலையும், குறளதிகாரப் பெயர்களின் மாற்றுப் பெயர் பெற்றிருத்தலையும், குறளதிகாரங்களோடு தொடர்புடையனவாயிருத்தலையும் காணலாம். அன்றியும் குறளதிகாரப் பொருளை நாலடியதிகாரங்கள் விரித்து உரைத்தலையும், உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் விளக்குதலையும் காணலாம். சில அதிகாரங்கள் குறள்நோக்கிற் பால் இயற்பிறழ்வுடையனவாயிருத்தலையும் காணலாம். மேலும் குறட்பாகுபாட்டிற் காணப்படா அதிகாரங்கள் இருத்தலையும் காணலாம்.

அவை வருமாறு:

(I) அதிகாரப் பெயர் ஒற்றுமையுடன:

அறம்:

1.	அறன் வலியுறுத்தல்	நா: 4 = கு: 4
2.	துறவு	நா: 6 = கு: 35
3.	பொறையுடைமை	நா: 8 = கு: 16
4.	ஈகை	நா: 10 = கு: 23
5.	தீவினையச்சம்	நா: 13 = கு: 21

பொருள்:

6.	கல்வி	நா: 14 = கு: 40
7.	பெரியாரைப் பிழையாமை	நா: 17 = கு: 90
8.	பெருமை	நா: 19 = கு: 98

9.	சுற்றந்தழால்	நா: 21 = கு: 53
10.	நட்பாராய்தல்	நா. 22 = கு: 80
11.	கூடாநட்பு	நா: 24 = கு: 83
12.	அறிவுடைமை	நா: 25 = கு: 43
13.	நன்றியில் செல்வம்	நா: 27 = கு:101
14.	மானம்	நா: 30 = கு: 97
15.	இரவச்சம்	நா: 31 = கு:107
16.	அவையறிதல்	நா: 32 = கு: 72
17.	புல்லறிவாண்மை	நா: 33 = கு: 85
18.	பேதைமை	நா: 34 = கு: 84
19.	கயமை	நா: 36 = கு:108

(II) மாற்றுப் பெயருடைய அதிகாரங்கள்:

1. நா: 7: சினமின்மை = கு: 31: வெகுளாமை
2. நா: 9: பிறர்மனைநயவாமை = கு: 15: பிறனில்விழையாமை
3. நா: 11: பழவினை = கு: 38: ஊழ்
4. நா: 12: மெய்ம்மை = கு: 36: மெய்யுணர்தல்
5. நா: 15: குடிப்பிறப்பு = கு: 96: குடிமை
6. நா: 18: நல்லினஞ்சேர்தல் = கு: 46: சிற்றினஞ்சேராமை
7. நா: 20: தாளாண்மை = கு: 62 ஆள்வினையுடைமை
8. நா: 29: இன்மை = கு: 105: நல்குரவு
9. நா: 35: கீழ்மை = கு: 108: கயமை
10 நா: 38: பொதுமகளிர் = 92: வரைவின் மகளிர்

(iii) தொடர்புடையன:

1. நா: 23: நட்பிற்பிழைபொறுத்தல் = கு: 81: பழைமை (சிலபாக்கள்)
2. நா: 40: காமம்நுதலியல் = 112,113: நலம்புனைந்துரைத்தல் காதற்சிறப்புரைத்தல்

(iv) குறளதிகாரத்தை விரித்துரைப்பன

1. நா: 1, 2, 3, 5 = கு: 34

செல்வ நிலையாமை இளமை நிலையாமை யாக்கை நிலையாமை தூய்தன்மை	= நிலையாமை

(2) நா: 35, 36 = கு: 108 (3) நா: 15, 16 = கு: 96

இழ்மை கயமை	= கயமை	குடிப்பிறப்பு மேன்மக்கள்	= குடிமை

(v) உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் விளக்குவன

1. நா: 25, 26: அறிவுடைமை, அறிவின்மை
2. நா: 10, 28 ஈகை, ஈயாமை

(vi) பால் இயற் பிறழ்வுடையன:

(அ) பாற் பிறழ்வுடையன:

1, ந: 38: பொதுமகளிர்: காமத்துப்பால்
கு: 92: வரைவின் மகளிர் பொருட்பால்

2. நா: 28: ஈயாமை = பொருட்பால்
நா: 10: ஈகை = அறத்துப்பால்
கு: 23: ஈகை = அறத்துப்பால்

(ஆ) இயற்பிறழ் வுடையன

1. நா: 4: அறன் வலியுறுத்தல் = துறவறவியல் = கு: 4: அறன் வலியுறுத்தல்—பாயிரவியல்
2. நா: 11 பழவினை—இல்லறவியல் = கு: 36: ஊழ்-ஊழியல்
3. நா: 12 மெய்மை-இல்லறவியல் = கு: 36: மெய்யுணர்தல் துறவறவியல்
4. நா: 15 குடிப்பிறப்பு-அரசியல் = கு: 96 குடிமை: குடியியல்
5. நா: 16: மேன்மக்கள்-அரசியல் = கு: 96 குடிமை: குடியியல்
6. நா. 17: பெரியாரைப் பிழையாமை (அரசியல்) = கு: 90 பெரியாரைப்பிழையாமை-நட்பியல்

7. நா: 19; பெருமை-அரசியல் = கு: 98: பெருமை-குடியியல்
8. நா: 21; சுற்றந்தழால்-நட்பியல் = கு: 53: சுற்றந்தழால் அரசியல்
9. நா:25: அறிவுடைமை-இன்பவியல் = கு:43: அறிவுடைமை அரசியல்
10. நா: 26: அறிவின்மை— ,, = கு: 43: ,, ,,
11. நா: 27: நன்றியில்செல்வம்- ,, = கு: 101: நன்றியில் செல்வம்—குடியியல்
12. நா: 29: இன்மை — துன்பவியல் = கு: 105: நல்குரவு-குடியியல்
13. நா: 30: மானம் — ,, = கு: 97: மானம் — ,,
14. நா: 31 இரவச்சம் — = கு: 107: இரவச்சம் ,,
15. நா: 32 அவையறிதல்-பொதுவியல் = கு: 72 அவையறிதல் அமைச்சியல்
16. நா: 33; புல்லறிவாண்மை-பகையியல் = கு: 85 புல்லறிவாண்மை: நட்பியல்
17. நா: 34: பேதைமை — ,, = கு: 84: பேதமை; நட்பியல் (4)
18. நா: 35: கீழ்மை — ,, = கு: 108: கயமை; குடியியல்
19. நா: 36: கயமை — ,, = கு: 108 கயமை ,,

(vii) பாகுபாட்டில் அடங்காது:
நா: 37: பல்நெறி—பல்நெறியியல்

---

(4) வள்ளுவர் நட்பை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் நட்பியலில் உரைத்தலால், புல்லாறிவாண்மை, பேதைமை என்பன நாலடியில் பகையியலில் இடம் பெறுதல் பெரியவேறுபாடு இல்லை.

குறைகள்

குறளின் பகுப்பு உறுதியான சிறந்த அடிப்படையிற் பொருளாழமும் தொடர்பும் பொருந்த அமைந்துள்ளது ஆனால் நாலடியின் பகுப்பிற்கு அவை சிறிதும் இல்லை குறளைப் போலவே நாலடியும் அறம், பொருள். காமம் (இன்பம்) ஆகிய முப்பாற்களையுடைய தாயினும், நாலடி, காமம் என்ற சொல்லிற்கு இழி பொருள் தருவதாய் அமைந்துள்ளது, காதல் வாழ்விற்கும் அகப்பொருண்மை கட்கும் சிறப்பு அளிக்காது சுருக்கமாகக் கூறி நாலடி ஒதுக்கி விடுகிறது. பெண்ணின்பம் வீடுபேற்றிற்குத் தடை என்ற சமணக்கோட்பாட்டின் உள்ளோட்டமே (Under-Current) இதற்குக் காரணம்.

நாலடியின் அறுத்துப்பாலின் இயற்பாகுபாடு ஓரளவிற்குக் குறளின் பாகுபாட்டைப் பின்பற்றுகிறது. வள்ளுவர் இல்லற வியலையடுத்துத் துறவறவியலைக் கூறுகிறார். நாலடியில் முறை தலைகீழாயுள்ளது. இல்லறத்தைக்கடிந்து துறவறத்தைச் சமணர் போற்றியமையே இதற்குக்காரணம் நிலையாமையை நாலடி நான்கு அதிகாரங்களில் விரித்துரைத்தல் இதற்குச் சான்றுபகரும்,

இல்லறவியலை நோக்குமிடத்து நாலடி இல்லற வாழ்வு பற்றிப் பேசவில்லை என்பதை உணர முடிகிறது. இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட் பேறு, அன்புடைமை, விருந்தோம்பல் போன்ற அதிகாரங்களில் வள்ளுவர் இல்லறத்தைத் திட்ப நுட்பமாக உரைக்கிறார். ஆனால் சமணர்கள் இவை பற்றிக் கூறாது இல்லறத்திற்குச் சிறப்பற்றனவாகிய மெய்ம்மை, பழவினை என்பனவற்றிற்கு முதன்மையளிக்கின்றனர்.

குறளின் பொருட்பாலின் இயற்பாகுபாடு பொருளாழ முடையதாய்த் தொடர்பு சிறந்ததாய்விளங்குகிறது. ஆனுல் நாலடியின் இயற்பாகுபாடு செவ்வனே அமையவில்லை இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பல் நெறியியல் என்பன அரசியல் நட்பியல்களோடு தொடர்புடையனவாய் அமையவில்லை.

காமத்துப்பாலை களவியல், கற்பியல் எனப்பகுத்து வள்ளுவர் அழகாகக் கோவையாகக் கருத்துக்களைக் கூறு கிருர் அவர் கருத்துக்களில் அகப்பொருளமைதி சிறந்து காணப்படுகிறது. ஆனுல் நாலடியின் காமத்துப்பால்இன்ப துன்பவியல் என்று பகுக்கப்பட்டுள்ளது. அகப் பொருள மைதியோ சிறப்புற அமையவில்லை. ஒரு வகையில் இன்ப மாகவும் பலவகைகளில் துன்பமாகவுமுள்ள பொதுமகளிர் தொடர்பையே இன்பதுன்ப வியலில் கூறுகின்றனர் சம ணப் புலவர்கள். இப்பாலிலும் சமணர் சமயக் கோட்பாட் டின் எதிரொலியையே காணமுடிகிறது.

இத்தகைய குறைகட்கு அவர்கள் சமயக்கோட்பாடு கள் காரணமாயிருப்பினும் வேறெரு காரணமும் உண்டு. நானூறு புலவர்கள் பாடிய நானூறு பாடல்களைத்தொகுத் துப் பகுக்கும்போது இயைபும் பொருளாழமும் எவ்வாறு அடிப்படையாய் இருக்க முடியும்?

<u>முன் தொடர்ச்சி:</u>

தொல்காப்பியம்—சொல்லதிகாரம்

சேனாவரையர் உரை

—*—

எளிமையாக்கம்: வித்துவான். **நா. இராமையாபிள்ளை எம். ஏ.**

சூத்திரம்: 4: பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம்தமக் கிலவே
உயர்திணை மருங்கில் பால்பிரிந்து இசைக்கும்

(இ—ள்) உயர்திணை மருங்கின் = உயர்திணையிடத்து; பெண்மை சுட்டிய ஆண்மைதிரிந்த பெயர்நிலைக் கிளவியும் = பெண்மைத்தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச் சொல்லும்; தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும் = தெய் வத்தைச் குறித்த பெயர்ச்சொல்லும்; இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே = இவையெனத்தம் பொருளை வேறு அறிய நிற்கும் ஈற்றெழுத்தினைத் தமக்கு உடையனவல்ல; உயர்திணை மருங்கில் பால்பிரிந்து இசைக்கும் = உயர்திணை யிடத்திற்கு உரியபாலாய் வேறுபட்டிசைக்கும்.

உதா:- (1) பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர் -பேடி, வந்தாள். பேடியர், வந்தார். (2) தெய்வம்சுட்டிய பெயர்—தேவன், வந்தான், தேவி வந்தாள். தேவர், வந்தார். (பேடர் வந்தார் என்ற உதாரணம் தவறானது)

பால்பிரிந்து இசைத்தலாவது: பேடிமுதலியனவும் தேவன்முதலியனவும் உயர்திணைப் பெயராய் ஆடு உவரி

சொல் முதலாயினவற்றிற்கு உரிய ஈற்றெழுத்தே தம் வினைக்கு ஈருகக்கொண்டு முடிதல்.

பேடி முதலியன பெண்ணுமல்ல; ஆணுமல்ல. அதனால் உயர்திணையில்லை. பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயரை, உயர்திணையாய்க் கொள்வர். தேவன் முதலியன உயர்திணையில்லை, ஏனென்றால் ''மக்கட் சுட்டே'' உயர்திணை என்றார். எனினும் தெய்வம்சுட்டிய பெயரை உயர்திணையாய்க் கொள்வர்.

'பெண்மை சுட்டிய' என்பது அலிப்பெயரை நீக்கிற்று. அலி, பெண்மை குறைந்து ஆண்மைமிக்கிருக்கும். பேடி பெண்மைமிகுந்து ஆண்மைகுறைந்திருக்கும். ''ஆண்மை திரிந்த'' என்பது பெண்பெயரை நீக்கிற்று. பெண்மை சுட்டாத பேடும் உண்டு. அதனால் 'பெண்மைசுட்டிய'' என்றார். பெண்மை திரிதலும் உண்டு; எனினும் ஆண்மைதிரிதல் பெரும்பான்மை. ஆதலால் ''ஆண்மை திரிந்த'' என்றார். பேடி, பேடியர் என்னும் சொற்கள் அடங்க ''பெண்மை சுட்டிய ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி'' என்றார்.

''சுட்டிய'' என்பது பெயரெச்சம். அது பெயர்நிலைக் கிளவி என்னும் பெயர்கொண்டது. ''ஆண்மைதிரிந்த'' என்பது இடைநிலை (இடைப்பிறவரல்)''ஆண்மை திரிதல்'' சொல்லுக்கு இல்லை. சொல்லால் உணர்த்தப்படும் பொருளுக்கு உண்டு. சொல்லுக்கும் பொருளுக்கும் இருக்கும் ஒற்றுமை கருதிப் பொருளுக்கிருக்கும் திரிபைச் சொல்மேல் ஏற்றி ''ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி'' என்றார். ''தன்மைதிரிபெயர்'' (சூ. 56) என்றாற்போலக்கொள்க.

வினா:— ''உயர்திணை மருங்கில் பால்பிரிந்து இசைக்கும்'' என்று கூறவே பேடி, தேவன் முதலிய பெயர்கள் தமக்குஎன வேறு ஈறுகளைப் பெற்றிருப்பனவல்ல என்பது

பெறப்படும். படவே "இவ்வென அறியும் அந்தம் தமக் கிலவே" என்றும் கூறவேண்டாம்.

விடை:— பேடி, தேவன் முதலியபெயர்களுக்கு, தமக் கென ஈறு இல்லை என்று சொல்லாவிட்டால், அவை தமக் கென ஈறுகளையுடையனவே என்றும், அவ்வாறு ஈறுகளைக் கொண்டிருந்தும் ஆடூஉவறிசொல் முதலாயின வற்றின் ஈற்றானும் இசைக்கும் என்றும் கருதஇடமுண்டு. இவ்வாறு எழுதும் ஐயத்தை நீக்குதற்கு "அந்தம் தமக்கிலவே" எனக் கூறல் வேண்டும். அந்தம் இல்லை என்றுகூறுவதுதெளிவை ஏற்படுத்தும்.

பேடியைப் பாலுள்ளும் தெய்வத்தைத் திணையுள்ளும் அடக்கினார் ஆசிரியர்.

உரையாசிரிர் கருத்து:— "சுட்டிய" என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஆண்மைதிரிதல் சொற் கின்மையின் "பெயர் நிலைக்கிளவி" என்பது ஆகுபெயராய்ப் பொருள்மேல் நின்றது.

சேனாவரையர் கருத்து: 'சுட்டிய' என்பது வினை யெச்சமானால், பெண்(தன்)மை சுட்டவேண்டி(உணர்த்து வதற்காக) ஆண்மை திரிந்தது என்று பொருள்கொள்ள வேண்டும். இங்கே ஆண்மை திரிதல் பெண்மைத் தன்மை எய்துதற்கில்லை; அது பேடிக்கு இயல்பு. ஆதலால் வினை யெச்சம் என்றது பொருந்தாது. "பெயர் நிலைக் கிளவி" என்பதுஆகுபெயராயின் "ஆண்மை திரிந்தபொருள்" எனப் பொருள்படும். இது சொல்இலக்கணம் கூறும் பகுதி பொருள் கூறுதலில்லை, ஆசிரியர் பொருளே கூறவிரும்பின் பேடி, தெய்வம் எனத் தாம் கருதிய பொருள் இனிது விளங்கக் கூறுவர். ஆசிரியர் தொல்காப்பியர் அவ்வாறு

கருதவில்லையாகையால் உரையாசிரியர்க்கும் அது கருத்தன்று. உரையாசிரியர் கருத்தென்று எவரோ எழுதிவிட்டார்.

சூ 5. னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்.

(இள்) னஃகான் ஆகிய ஒற்று ஈற்றிலிருந்தால், அவ்வினைச் சொல் ஆடூஉ அறி சொல்லாம்.

உதா:- உண்டனன், உண்டான்; உண்ணு நின்றனன், உண்ணு நின்றான்; உண்பான்; கரியன். கரியான்.

சூத்திர அமைப்பு எவ்வாறிருந்தாலும், ஆடூஉ அறி சொல் னகரவீற்றுச் சொல் எனக் கொள்க. "னஃகான் ஒற்றே" என்று கூறியதற்குக் காரணம் பால் உணர்த்துதற் சிறப்பு நோக்கி யாகும். அறமாவது அழுக்காறின்மை என்றாற்போலக் கொள்க அழுக்காறின்மை என்னும் அறம் மற்றைய அறங்களில் சிறந்தது என்ற கருத்தைச் சுட்டவே அவ்வாறு வாக்கியம் அமைக்கப்பட்டது. "அழுக்காறின்மை அறம்" ஒன்றால், அழுக்காறின்மையும் மற்ற அறங்களைப் போல் ஒன்றாகும் என்ற கருத்தைத் தரும். மற்ற அறங்களினும் சிறந்தது என்ற கருத்தைத் தராது. அதுபோல னஃகான் ஒற்று சிறப்புடையது.

"ஒற்றே" என்பதிலுள்ள ஏகாரம் அசைநிலை என்பர் சேனுவரையர். ஆனால் உரையாசிரியர் பிரிநிலை என்றார். பிரிநிலையாயின் ஆடூஉ வறி சொல்லுக்கு இலக்கணங் கூறுதலோடு பிரித்ததன் சிறப்புணர்த்துதலும் வேண்டும். அவ்வாறில்லாததால் "அவ்வுரை போலியுரை என்க" என்பர் சேனுவரையர்.

சூ 6. னஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்.

(இ—ள்) ளஃகான் ஆகிய ஒற்று ஈற்றிலிருந்தால், அவ்வினைச் சொல் மகடூஉ அறிசொல்லாம்.

உதா:- உண்டனள், உண்டாள்; உண்ணு நின்றனள்.
உண்ணு நின்ருள்; உண்பள், உண்பாள்; கரியள்.
கரியாள்.

முன் ஐந்தாவது சூத்திர னஃகான் ஒற்றுக்குக் கூறிய சிறப்பெல்லாம் இச்சூத்திரத்திலுள்ள ளஃகான் ஒற்றுக்கும் பொருந்தும்.

சூத்திரம் 7- ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவியும் உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலர்அறி சொல்லே.

(இ-ள்) ரஃகான் ஒற்றும்-ரஃகான் ஆகியஒற்றும்; பகர இறுதியும்-பகரமாகிய இறுதியும்; மாரைக் கிளவியும்-மார் என்னும் இடைச்சொல்லும்; உளப்பட மூன்றும்-இம்மூன்றும்: நேரத் தோன்றும்-திரிதலில்லாது நேராகத் தோன்றும்; பலர் அறிசொல்-பலர் அறிசொல்லாம். 'ஏ' என்பது ஈற்றசை.

உதா:- உண்டனர், உண்டார்; உண்ணுநின்றனர், உண்ணுநின்ருர்; உண்பர், உண்பார்; கரியார் என்பன ரகர ஒற்றுக்கு உதாரணங்கள். கூறுப; வருப என்பன பகர விறுதிக்கு உதாரணங்கள். கொண்மார்: சென்மார் என்பன மார் என்னும் சொல்லுக்கு உதாரணங்கள்.

தடை:- மார் என்பது எதிர்காலம் பற்றி வந்த ஆர் என்பதேயாகும்; ஆகவே மார் என்பது ரஃகான் ஒற்றில் அடங்கும் தனியாகக் கூற வேண்டுவதில்லை.

விடை:— (1) ஆர் என்றால் கொண்மார் என்பதிலுள்ள மகரம் காலம் பற்றிவந்த ஓர் எழுத்தாகும். உண்பார், வருவார் என்பவற்றில் காலம்பற்றிவரும் எழுத்து முதனிலைக்கு ஏற்ப வேறுபட்டுவரும். உண்மார் வருமார் என்பவற்றில் அவ்வாறு வேறுபட்டு வராமல் மகரத்தோடு கூடி வருதலோடு எல்லாமுதனிலை மேலும் அவ்வாறே வரும். (2) மார் என்னும் விகுதியையுடைய வினைமுற்று மற்றயவை போல பெயர்கொண்டு முடியாது. வினைகொண்டே முடியும் பொருள் வேறுபாடு உடையது. இவ்விரு ஏதுக்களாலும் மார் என்னும் ஈறு ஆர் ஈறு அன்று என்க.

ஆர், ஆர் என்னும் இரண்டு ஈற்றையும், மூன்றுகாலமும் வினைக்குறிப்பும் பற்றி வருதல் ஒப்புமை நோக்கி ரஃகான் என அடக்கி ஓதினார் மூன் ஐந்தாவது சூத்திரங்களில், அன், ஆன்; அள், ஆள் என்பனவற்றையும் இவ்வொப்புமைபற்றி னஃகான், ளஃகான் என அடக்கிஓதினார்.

ரகாரம் மூன்று காலமும் வினைக்குறிப்பும் பற்றிப்பெருவழக்காய் வருதலின் முன்வைத்தார் பகரவிறுதி அதைவிடக் குறைவாய் வருதலின் இடைவைத்தார். மார் என்னும் இறுதி சிறு வழக்கிற்றாய் வருதலின் பின்வைத்தார்.

உண்கும், உண்டும் வருதும், சேறும் என்பவும் பிறவும் தன்மைப் பன்மை விகுதிகள் பெற்ற பலரறி சொல்லாயினும் அவை நேரத்தோன்றாப் பலரறி சொற்களாம். ர், ப, மார் என்னும் மூன்று விகுதி பெறுவனவே நேரத்தோன்றும் பலரறி சொற்கள்.

மூன்றும் பலர் அறிசொல் என்றாராயினும், பலர் அறிசொல் இம் மூன்றும் என்க இதுவே கருத்தாகக்கொள்க.

சூத்திரம். 8. ஒன்றறி கிளவி தறட வூர்ந்த

குன்றியல் உகரத்து இறுதி யாகும்.

(இள்) ஒன்று அறிகிளவி = ஒன்றறி சொல்லாவது தறட ஓர்ந்த = தறட என்னும் ஒற்றை யூர்ந்த; குன்றியலு கரத்து இறுதியாகும் = து. று. டு என்னும் குற்றிய லுக ரத்தை இறுதியாகவுடைய சொல்லாம்.

உதா:— து— வந்தது; வாராநின்றது; வருவது; கரிது.
று— கூயிற்று; தாயிற்று;கோடின்று; குளம்பின்று.
டு— குண்டுகட்டு; கொடுந்தாட்டு; குறுந்தாட்டு.

கிடக்கைமுறையால் டு, து, று என்று கூறுது து,று,டு எனச்சிறப்பு முறையாற் கூறினர். து என்னும் விகுதி மூன்று காலமும் வினைக்குறிப்பும் பற்றிவரும். று என்னும் விகுதி இறந்தகாலமும் வினைக்குறிப்பும் பற்றிவரும் டு என்னும் விகுதி வினைக்குறிப்பே பற்றிவரும் இவ்வேறுபாடு டைமையால் குற்றியலுகரம் என ஒன்ருகாது மூன்ருயின.

குற்றியலுகரம் — பண்புத்தொகை; குன்றியலுகரம்— வினைத்தொகை. இதை மெலிந்து நின்றது என்ருர் சேனுவரையர்.

சூத்திரம் 9. அ ஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே.

(இள்) பலவறிசொல் = பலவறி சொல்லாவன; அ, ஆ, வ என வரூஉம் இறுதி = அ. ஆ. வ என வரும் இறுதியையுடைய; அப்பால் மூன்றே = அக்கூற்று மூன்று சொல்லாம்.

உதா:— அ— உண்டன, உண்ணாநின்றன, உண்பன, கரியன.

ஆ உண்ணு, தின்னு.
வ— உண்குவ, தின்குவ,

உண்ட, உண்ணுநின்ற, உண்ப.கோட்ட என்பன 'அன்' பெருத அகர வீற்றுப் பலவறிசொல்லாம்.

தடை:— உண்ப என்பது பகரவீற்றுச்சொல்லாகுமே உயர்திணைப் பலர் பாலுக்கு வருமல்லவா? அஃறிணைக்கு வந்திருக்கிறதே. ஏன்?

விடை:— பகர இறுதியாய் இருந்தாலல்லவா அது உயர்திணைப் பலர்பாலுக்கு வரும். 'தகைப்ப; 'கொடுப்ப என்பனபோல உண்ப என்பதும் எதிர்காலத்துவரும் பகர மூர்ந்து நின்ற அகர வீற்றுச் சொல்லாதலின் அஃறிணைக்கு வந்தது.

தடை:— காட்டப்பட்ட 'தகைப்ப' 'கொடுப்ப'என்பன 'தகைபன; 'கொடுப்பன' என்னும் சொற்களிலிருந்து செய்யுள் முகாரத்தால் வந்தனவாகும் அவற்றை வழக்கு முடிவிற்கு உதாரணமாகக் காட்டல் பொருந்தாது

விடை:— தகைப்பன, கொடுப்பன என்னும் சொற்களின் இறந்தகால முடிவு காண்க, தகைத்தன என்பது முதனிலைக்கேற்ற வாற்ருன் அக்காலத்திற்குறிய எழுத்துப் பெற்று அன்பெற்றது அன்பெருமல் "தகைத்த" என்றும் வரும். இனி நிகழ்கால முடிவுகாண்க, தகையா நின்றன முதனிலைக்கோற்றபடி அக்கால எழுத்துப்பெற்று அன் பெற்றது. அன்பெருமல் "தகையாநின்ற" என அகவீற்றில் வரும். இவைபோல எதிர்காலத்திலும் முதனிலைக்கேற்ற படி அக்காலத்திற்குறிய எழுத்துப்பெற்று அன்பெற்றும் பெருதும்வரும். எதிர்கால எழுத்து ப. வ. என்பன. பகரம்

பெற்று அன்பெற்று முடியும்போது 'தகைப்பன' எனவரும். 'அன்' பெறாது பகர எழுத்துமட்டும் பெற்று முடியும் போது "தகைப்ப" எனவரும் இவ்வாறே கொடுப்பன, கொடுப்ப என்பனவும் வரும். இறந்தகாலத்தில் கொடுத்தன —கொடுத்த என்றும், நிகழ்காலத்தில் கொடாநின்றன— கொடாநின்ற என்றும் வரும் எதிர்காலத்தில் வகர எழுத்துப்பெற்று முடியும்போது. வருவன, வருவ; செல்வன, செல்வ எனவரும், எனவே தகைப்ப, கொடுப்ப என்பன செய்யுள் விகாரமில்லை, இயல்பு முடிவுபெற்றனவேயாம்.

கொடுப்பன யாவை அவைபோல என உவமை கருதிச் சொல்லப்பட்டதன்று அவை தம்மையே சுட்டிநிற்றலின் தற்குறிப்பேற்றமாகலின் "கொடுப்ப" என்பது பெயரன்று; வினையேயாம்.

தடை:— பலவறிசொல்லின் வகரவீறு, அன்பெறாது எதிர்காலத்தில்வரும் வகர ஒற்று ஊர்ந்துநின்ற அகரமே யாகும். வகர ஈறு ஒன்று கொள்ளவேண்டாம்.

விடை:— அகர ஈறு என்றால், உண்குவ, தின்குவ என்பவற்றிலுள்ள வகரம் காலம் பற்றிவந்த எழுத்தாகல் வேண்டும். காலம் பற்றிவரும் எழுத்து முதனிலைக்குத் தகுந்தபடி வேறுபட்டு வரும், அவ்வாறின்றி உண்குவ, தின்குவ என எல்லாமுதனிலை மேலும் வகரத்தோடுகூடி வருவதுகாண்க. குகரம் பெற்றபின் அன் பெறாது எனவே உண்குவ. தின்குவ என்பன வகர ஈறேயாம்.

வருவ, செல்வ எனக்குகரம் பெறாதபோது வகர ஈறு என்றும் அகர ஈறு என்றும் கொள்ளலாம். எல்ல வினையிலும் சேரும் இயல்புடையது வகர ஈறு இங்கே விலக்கப் படவில்லை. எல்லா வினையிலும் சேரும் இயல்புடைய அகர

ஈறும் இங்கே வந்து அன்பெறுது கால வெழுத்து வகர மூர்ந்து வருவ, செல்வ என நின்றன.

வரும் என்னும் உகரம் விகாரவகையான் நீண்டு நின்றது. ஈற்று வகையான் மூன்ருகிய சொல் என்பார் அப்பால் மூன்று என்ருர்.

சூத்திரம்: 10 இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றினின்று இசைக்கும் பதினே ரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே.

(இ—ள்) இருதிணைமருங்கின் ஐம்பால் அறிய = உயர் திணை அஃறிணை என்னும் இரண்டுதிணைக் கண்ணும் உளவாகிய ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் ஐந்து பாலும் அறிய; ஈற்றினின்று இசைக்கும் பதினேரெழுத்தும் = அவ்வச்சொல்லின் இறுதிக்கண் நின்று ஒலிக்கும் பதினேரெழுத்தும்; தோற்றம் தாமே வினையொடுவருமே = புலப்படுத்தற்கண் வினைச்சொற்கு உறுப்பாய்ப்புலப்படும்.

ஈற்றினின்று இசைக்கும் பதினேரெழுத்துக்கள்:— ன்; ள்; ர்; ப; மார்; து, று, டு, அ, ஆ, வ என்பன.

இவற்றுள் ன், ள், ர், மார் என்னும் நான்கும் இறுதி நின்றுணர்த்தும் என்று முன் சூத்திரங்களில் கூருமல் இங்கே கூறுவது நினைவூட்டுவதாகும். இதுவே ஞாபகமாயிற்று. அல்லனவற்றிற்கு அதாவது ப, து, று, டு, அ, ஆ, வ என்பனவற்றிற்கு ஈற்றின்றிசைக்கும் என்பது அநுவாத மாத்திரம் ஆகும். அநுவாதமாததிரம் என்பது முன்கூறிய தனை வேறு ஒரு காரணம்பற்றிப் பின்னரும் எடுத்தாளுதல்

தாமே என்பது கட்டுரைச் சுவைபடநின்றது. வினை எனப்பொதுப்படக் கூறிஞராயினும், ஏற்புழிக்கோடல் என்பதனல் படர்க்கைவினை என்று கொள்ளப்படும். இவை பெயரொடு வருவழித்திரிபின்றிப் பால்விளக்காமையின் வினையொடுவரும் என்ருர்.

தமிழ்ச் சங்கப் புரவலர்

டாக்டர். ராசேந்திர பிரசாத்

அன்பும் பண்பும் கொண்டவரே!
அண்ணல் வழியில் நடந்தவரே!
துன்பம் தன்னை யாம் கொள்ளச்
சொல்லா தெம்மைப் பிரிந்தீரே!
என்ன செய்வோம்? அறிகிலமே!
இனிமேல் எங்கே உமைக்காண்போம்?
அன்பால் நெஞ்சில் நிறைந்திட்டீர்!
அதனால் அமைதி கொள்கின்றோம்!

மு. உ.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ	ப
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சன தீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக் கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6
42	அகராதி நிகண்டு	—	0	12
43.	மேகவிடு தூது	—	0	2
44.	திருக்குற்றாலமாலை	—	0	2
45.	தண்டலையார் சதகம்	—	0	4
46.	இராமோதந்தம்	—	0	3
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6
49.	கூடற்புராணம்	—	0	10
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12
53.	பாப்பாவினம்	—	0	10
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6
58.	கலைசைக்கோவை	—	0	12
59.	பெருந்தொகை	—	5	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5
61.	சிராமலைக்கோவை	—	0	12
62.	மத்யவியாயோகம்	—	0	2
63.	அமிர்தரஞ்ஜநி	—	0	2
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8
65.	திருச்சிறுபுலியூருலா	—	0	12
66.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற் பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.